# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்: 127/2017.

ஆணை நாள் : 01–10–2018

திரு. ஜாண்ஸ்டீபன்,
13–65 துத்திக்காலவிளை,
பூவன்கோடு,
செங்கோடி ,
கன்னியாகுமரி மாவட்டம் –629 177. -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் . -- எதிர் மனுதாரர்

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், பூவன்கோடு, 13–65, துத்திகாலவிளை பகுதியினை சேர்ந்த திரு. A. ஜாண்ஸ்டீபன், என்பவரின் 20.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.05.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 127/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, ,கீழ்க்காணும் இறுதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.44/2017, நாள் 27.03.2017–ஐ குறிப்பிட்டும், வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலம் குறித்து பல்வேறு புகார்களை தெரிவித்தும், நடவடிக்கை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 09.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர், தனது 10.07.2017 நாளிட்ட அறிக்கையில் மேற்படி எதிர் மனுதாரரின் வீட்டினை தற்போதைய செயல் அலுவலர் மற்றும் முன்னாள் செயல்

அலுவலரும் கூட்டாக ஆய்வு செய்து திரு. செல்வின்ஜோசப் என்பவர், தரைதளத்திற்கு 60.46 ச.மீ மற்றும், முதல் தளத்திற்கு 35.24 ச.மீ என்ற அளவில் வரைபட அனுமதி பெற்றிருந்தார் எனவும் தரைதளம் 62.40 ச.மீ என்ற அளவில் வீடு கட்டியுள்ளதாகவும், மேலும் முதல் தளத்தில் வரைபட அனுமதிக்கு மாறாக 62.40 ச.மீ அளவில் கட்டிடம் கட்டியுள்ளதாகவும், கூடுதலாக 29.10 ச.மீ கட்டப்பட்டுள்ளதாக அறியப்பட்டதின் அடிப்படையில் திரு. செல்வின் ஜோசப் என்பவருக்கு கூடுதலாக கட்டியுள்ள கட்டிடத்திற்கு வரைபடம் சமர்ப்பிக்க 21.02.2017ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து திரு. செல்வின் ஜோசப், கூடுதலாக கட்டிய 29.10 சதுர மீட்டர் கட்டிடத்திற்கு வரைபட அனுமதி கோரி 03.05.2017ல் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, வேர்கிளம்பி பேரூராட்சி வரைபட அனுமதி ஆணை எண்.23/2017–18 நாள் 24.05.2017ல் அனுமதி வழங்கப்பட்டும், மேற்படி கட்டிடத்திற்கு ஏற்கனவே வரி விதிப்பு செய்த நாள் முதல் (2014–15 முதல் 2016–17 வரை) மூன்று ஆண்டுகளுக்கு பிழைக் கட்டணம் வசூலித்து, நிலுவை வரியினங்களும் வசூலிக்கப்பட்டு பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பு ஈடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு . செல்வின் ஜோசப், என்பவருக்கு கூடுதல் கட்டுமானத்திற்கான வரைபட அனுமதி வழங்கக்கூடாது என முறையீட்டு மனுதாரர் கைபேசி மூலம் மிரட்டியதோடல்லாமல் கடிதமும் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் திரு.செல்வின் ஜோசப் என்பவர் தனது வீட்டின் கிழக்குப் பகுதியில் பள்ளமாக இருந்த சுமார் 5 அடி உள்ள சிறிய பகுதியினை லெவல் செய்வதற்கு 4 பில்லர்கள் போட்டுள்ளதாகவும், இந்த பில்லர்கள் காலியாக இருந்த கட்டிடத்தின் அடிப்பகுதியில் உபயோகமற்ற பொருட்களான வீட்டு சமையலுக்கு தேவைப்படும் விறகையும், தூசி எடுக்க பயன்படும் துடப்பத்தையம், கழிவறைகளில் பயன்படுத்திய சேதமான பிரஷ்களையும், வீட்டுக்கு பெயின்ட் அடித்த காலி டப்பாக்களையும் இன்னும் பிற பொருட்களையும் போட்டு வைத்துள்ள இடத்தினை முறையீட்டு மனுதாரர் பார்வையிடாத அடித்தளம் என தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி பகுதி 5 அடி உயரம் மட்டுமே உள்ளதாகவும், அப்பகுதியில் கதவுகள் அமைக்காமலும் குடியிருப்பு கட்டிடமாக அமைக்கப்படாமலும் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரருக்கும், எதிர் மனுதாரரான திரு.செல்வின் ஜோசப் என்பவருக்கும் இடையே பத்மனாபபுரம் முன்சீப் கோர்ட்டில் வழக்கு எண். O.S.No 96/2013 ன் மூலம் வழக்கு நடைபெற்று வருவதால், மேற்படி வழக்கு முடிந்த பிறகே மேற்படி சொத்தில் கட்டப்பட்டுள்ள வீடு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கமுடியும் என முறையீட்டு மனுதாரருக்கு கடிதம் மூலம் பதில் வழங்கப்பட்டதாக, வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.08.2017 நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 20.05.2017 ஆம் நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக, வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்பட்டு, இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.44/2017 நாள். 27.03.2017ல் மேற்படி வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.தை.சத்தியதாஸ், அளித்துள்ள வாக்குமூலம் குறித்து முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள கருத்துக்களடங்கிய மனுவின் நகலினை, நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, இது குறித்து உரிய தல ஆய்வு மேற்கொண்டும், பேரூராட்சி ஆவணங்களை சரிபார்த்தும், பிரத்யேக குறிப்புரையுடன் ஆய்வறிக்கையினை

சமர்ப்பிக்கக் கோரி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க.எண். 8319/2014/ப.4/நாள்09.07.2018ன் மூலம் மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பான தனது ஆய்வறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக 06.07.2018 அன்று தல ஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டாதகவும் அதன் அடிப்படையில் மனுதாரர் தெரிவித்துள்ள முறையீடுகள் சம்பந்தமாக தனது பதிலினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. மேற்படி முறையீடு குறித்து நேரடி ஆய்வு, மற்றும் வேர்கிளம்பி பேரூராட்சி அலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், திரு.செல்வின் ஜோசப் என்பவரால் புதிய கட்டிடம் கட்ட வரைபட அனுமதி கோரப்பட்டதைத் தொடர்ந்து, வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் எண்.146/2012–13, நாள்.26.12.2012ன்படி தரைதளத்திற்கு 60.46 சதுர மீட்டர் அளவிலும், முதல் தளத்திற்கு 35.24 சதுர மீட்டர் என்ற அளவில் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் தரை தளம் 62.40 ச.மீ என்ற அளவிலும், அதே போல் முதல் தளமும் 62.40 ச.மீ என்ற அளவில் வீடு கட்டப்பட்டுள்ளதாகவும், இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.44/2017, நாள்.27.03.2017ல் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, கூடுதலாக கட்டப்பட்ட 29.10 ச.மீ கட்டிடத்திற்கு அனுமதி பெற, செயல் அலுவலரால் முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கூடுதல் வரைபட அனுமதி ஆணை எண்.23/2017–18, நாள்.24.05.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டு, கூடுதல் கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி கட்டணமாக ரூ.5,820/–செலுத்துச்சீட்டு எண்.210/2017–18, நாள் 23.05.2017ன்படி வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மூன்று ஆண்டு நிலுவைக் கட்டணமாக ரூ.1,596/- செலுத்துச் சீட்டு எண்.214/2017–18, நாள்.25.05.2017ன்படி வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை செயல் அலுவலர் கண்காணிக்கத் தவறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
2. முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில், மேற்படி முறையீடு குறித்து முறைமன்ற நடுவத்தால் ஒரு அலுவலரை நியமித்து முறைகேடுகளை கண்டுபிடிக்க தெரிவித்துள்ளமைக்கு, தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவ அதிகார வரம்பிற்குட்பட்ட திரு.தை.சத்தியதாஸ், என்பவர் இப்புகாருக்கு தொடர்புடையவர் என்பதாலேயே அவரது விளக்க அறிக்கை பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. முறையீட்டு மனுதாரரால் பத்மனாபபுரம் முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S No 96/2013 ல் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே இது குறித்து மேல் நடவடிக்கை தொடர இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. கட்டிட வரைபட அனுமதிக்கும், கட்டியுள்ள கட்டிடத்திற்கும் உள்ள வேறுபாடு கண்டறியப்பட்டு, கூடுதலாக கட்டப்பட்ட 29.10. ச.மீ கட்டிடத்திற்கு 3 ஆண்டுகளுக்கு நிலுவைக் கட்டணம் செலுத்து சீட்டு எண்.214/2017–18, நாள்.25.05.2017ன்படி ரூ. 1,596/– வசூலிக்கப்பட்டுள்ளதால், இதன் மூலம் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியதை செயல் அலுவலர் கண்காணிக்கத் தவறியுள்ளார் என தெரியவருவதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. திரு. செல்வின் ஜோசப் என்பவர் கட்டியுள்ள வீட்டில் பள்ளமாக இருந்த கிழக்குப் பகுதியில் 4 1/2 அடி உயரத்தில் 4 பில்லர்கள் போட்டு அதன் கீழ்ப் பகுதியில் உபயோகமற்ற பொருட்கள் மழையில் நனையாத வகையில் போட்டு வைத்துள்ளதாகவும், அதில் கதவு எதுவும் போடப்படவில்லை எனவும், குடியிருப்புக் கட்டிடமாக அமைக்கவில்லை எனவும், இருப்பினும் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டுவதை செயல் அலுவலர் கண்காணிக்கத் தவறியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரால் மேற்படி நிலம் குறித்து பத்மநாபபுரம் முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No. 96/2013 ல் வழக்கு நடைபெற்று வருவதால் மேற்கண்ட கட்டிடம் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை ஏதும் பிறப்பிக்க இயலாது. இருப்பினும், திரு. செல்வின் ஜோசப், என்பவர் கட்டிட வரைபட அனுமதியினை விட கூடுதலாக கட்டியுள்ள கட்டிடம் குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் நடவடிக்கை எடுக்கத் தவறியதை கருத்தில் கொண்டு, அவர் மீது தக்க துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.'

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக [illegible] ன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

17/10/2018

செயலாளர்.

17/10/18

17/10/18

பெறுநர்.

1.திரு. [illegible]
13-65 [illegible],
பூவன் [illegible],
செங்கோடி ,
கன்னியாகுமரி மாவட்டம் –629 177.

2.செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108